முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்களை அமைக்கும் நேரத்தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எத்தனை துணை மின் நிலையங்கள் என்பதை மின்சார வாரியத்திலே இருக்கின்ற நிதிநிலையைப் பொறுத்துத்தான் இன்றைக்கு வரையறுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டாலே அதற்கு ஆவன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். ஆகவே வெகு விரைவிலே அதற்கான பணிகள் துவங்கப்படும். அதற்குரிய அனுமதியும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(ஆ) அரவக்குறிச்சி, கரூர் பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்புத் திருமதி கே. மரியம் உல் ஆசியா, திரு. ம. சின்னசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரவக்குறிச்சி மற்றும் கரூர் பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளது குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

கரூர் தாலுக்காவில் அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை மற்றும் சின்னதாராபுரம் ஆகிய பகுதிகளில் சுமார் 1,500 விசைத்தறிகளும் அவற்றிற்கு சுமார் 500 விசைத்தறி உரிமையாளர்களும் உள்ளனர். இவர்களிடம் சுமார் 6000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். விசைத்தறி உரிமையாளர்களுக்கும் பஞ்சாலை உரிமையாளர்களுக்கும் இடையில் விசைத்தறி உரிமையாளர்களின் தயாரிப்புகளுக்கு வழங்கப்படும் தொகை ஒப்பந்த அடிப்படையில் (contract basis) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட மின்கட்டண உயர்வினை அடுத்து விசைத்தறி உரிமையாளர்கள் 'சிறு விசைத்தறி நெசவாளர்களின் கூட்டுக்

குழு' என்ற அமைப்பில் தங்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்த தொகையில் 20 சதவீதம்உயர்த்திஅளிக்கக் கோரி 2.3.1992 முதல் அரவக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த மேற்கண்ட இடங்களில் தறிகளை ஓட்டவில்லை. இதனால் இவர்களிடம் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டது. இப் பிரச்னை சம்பந்தமாக கரூர் வட்டாட்சியர் (தாசில்தார்) முன்னி லையில் 17.3.1992 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பஞ்சாலை உரிமையாளர்கள், விசைத்தறி உரிமையாளர்கள் கோரிய 20 சதவீதம்உயர்வைஅளிக்க வாய்மூலமாக ஒப்புக்கொண் டதையடுத்து 20.3.1992 முதல் தறிகள் ஓடத் துவங்கின. தற் போது அரவக்குறிச்சி பகுதியில் சகஜ நிலைமை ஏற்பட்டுள்ள தெனவும் கரூர் பகுதியில் இதுபோன்ற ஏதும் பிரச்னை ஏற்பட வில்லை எனவும் தெரியவருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டண உயர்வு, பசல் விலை உயர்வு மற்றும் விசைத் தறி உதிரி பாகங்களின் விலை உயர்வு காரணமாக அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை மற்றும் சின்ன தாராபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள விசைத்தறி உரிமையாளர் களும், அதை போன்ற பெரியார் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள விசைத்தறி உரிமையாளர்களும், சிறு விசைத் தறி நெசு வாளர்களின் கூட்டுக் குழு என்ற அமைப்பில் தங்களுக்கு வழங்கப் படும் ஒப்பந்தம் தொகையில் 20 சதவீதம் உயர்த்தி அளிக்கக் கோரி 2.3.1992 முதல் விசைத்தறிகளை ஓட்டவில்லை. இதனால் அதிலே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் வேலையின்றி சிரமப் பட்டார்கள். இங்கே தரப்பட்டுள்ள விவர அறிக்கையில் 17.3.92 அன்று கரூர் வட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் விசைத்தறி உரிமையாளர்கள் கோரிய 20 சதவீதம் உயர்வை அளிக்க பஞ்சாலை உரிமையாளர்கள் வாய் மூலமாக ஒப்புக் கொண்டதாகவும், அதனையடுத்து 20.3.1992 முதல் தறிகள் ஓடத் துவங்கின என்றும் தரப்பட்டுள்ளது. நன்றி. விசைத்தறிகள் ஓடாமல் இருந்த நாட்களாக 18 நாட்களுக்கும் வேலையின்றி பாதிக்கப்பட்ட நெசவுத் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க விசைத்தறி உரிமையாளர்களிடம் பேசி, நஷ்ட ஈட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் புரட்சியினுடைய நாயகியாக விளங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழகத் திலே தொழில் அமைதி நிலவிக்கொண்டிருக்கிறது; தொழிலாளர் களுடைய நலன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே இரண் டாம் தேதி ஏற்பட்ட பிரச்சினையை உடனடியாக பேசித் தீர்த்து 20-ஆம் தேதி முதல் அந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து தொழிலாளர்கள் நல

துணை ஆணையாளர் முன்னிலையில் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தால் இது குறித்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : இந்த விவர அறிக்கையில் 17.3.1992 ஆம் தேதி கரூர் வட்டாட்சியர் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையில் விசைத் தறி உரிமையாளர், பஞ்சாலை உரிமையாளர்கள் மட்டும் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வந்து இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலே விசைத்தறி தொழிலாளர்கள் பங்கேற்றார்களா என்பது இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இனிமேல் எதிர்காலத்திலேயாவது இதுபோன்ற பிரச்சினைகள் எழுகின்றபோது, பஞ்சாலை உரிமையாளர்கள், விசைத் தறி உரிமையாளர்கள், அத்தோடு தொழிலாளர்களையும் சேர்த்து பேசினால்தான் நல்ல முடிவு ஏற்படும். மேலும் போடுகிற ஒப்பந்தம் வாய்மொழியாக போடப்பட்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. முத்தரப்பினரை அழைத்து ஒரு ஒப்பந்தத்தை எழுத்து மூலம் போட்டால்தான் எதிர்காலத்திலே இதற்கு ஒரு நல்ல தீர்வாக இருக்கும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எதிர்காலத்திலேயாவது இதுபோன்ற முடிவை எடுக்க அரசு முன் வருமா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்மொழியாக போடப்பட்ட அந்த ஒப்பந்தத்தை முத்தரப்பினரும் ஏற்று 2.3.1992 ஆம் தேதி முதல் விசைத் தறிகள் இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே எந்தப் பிரச்சினைகளும் அங்கே எழுப்பப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர் மற்றும் உரிமைக் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-05

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா' மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.